

# சர்வதேசத்திடம் நீதி கோரி விண்ணதிரக் கோஷங்கள்

## முல்லையில் திரண்ட மக்கள்

சர்வதேசமே எமக்காகக் குரல் கொடு!, என்ற தொனிப் பொருளில் முல்லைத்தீவில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் இந்தப் பேரணியை முன்னெடுத்தது.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கோரியும், புதைகுழி அகழ்வின்போது சர்வதேச நிபுணத்துவத்தின் கண்காணிப்பை வலியுறுத்தியும், குருந்தூர்மலை உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.






முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு அருகில் ஆரம்பமான பேரணி, நீதிமன்றம் முன்பாகச் சென்று முல்லைத்தீவு - மாங்குளம் வீதியூடாக மாவட்டச் செயலகத்தை வந்தடைந்தது.

இந்தப் பேரணியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், மதகுருமார்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்டோர் பெருமளவில் கலந்துகொண்டு சர்வதேசத்திடம் நீதி கோரி விண்ணதிரக் கோஷமிட்டனர்.

இதேவேளை, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (03)

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 11 வெள்ளிக்கிழமை 28.07.2023 கதிர் 39

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# சர்வதேச காண்காணிப்பில் பொது வாக்கெடுப்பு தமிழ் மக்களின் ஆணையைப் பெற வேண்டும்

## முல்லைத்தீவு ஆர்ப்பாட்டத்தில் அறிக்கை

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும், சர்வதேச நிபுணத்துவத்தை, கண்காணிப்பை வலியுறுத்தியும், தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இன்று முல்லைத்தீவில் இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.


கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை சிங்களப் பேரினவாத அரசு ஈழத்தமிழர்கள் மீது இன்றும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இக்கட்டமைக்கப்பட்ட இனவழிப்பில் 2➤

# வசந்த முதலிகேவுக்குப் பிணை!

நேற்று கைது செய்யப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் வசந்த முதலிகே, கொழும்பு கோட்டை பிரதான நீதவானின் உத்தரவின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2020 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்பாக நடத்தப்பட்ட போராட்டத்தின்போது ஏற்பட்ட 2➤





# நீதிக்கான போராட்டத்தால் முடங்கியது வடக்கு கிழக்கு

முல்லைத்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைக்குழி விவகாரம், தமிழ் அரசியல் பரப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், சர்வதேச நிபுணர்களின் ஒத்துழைப்புடன், சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் இந்த விசாரணைகள் இடம்பெற வேண்டும் என 2➤

# மடு மாதா தேவாலய ஆவணித் திருவிழா

மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியை இம்முறை திரு-த்தந்தையின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்-துள்ளார்.



மன்னார் மாவட்டச் செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் மாவட்ட அரசாங்க அதி-பர் தலைமையில் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடலின்போதே இந்தத் தகவலை அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை ஆவணி மாத திருவிழாவிற்கு வழமையை விட அதிகளவில், அதாவது சுமார் 7 இலட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறி-ப்பிட்டார். 2➤

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## சுகாதார அமைச்சக அனைத்து நிர்வாக ஊழியர்களுக்கும் கைரேகைப் பதிவு கட்டாயம் - ஒகஸ்ட் 1 முதல் நடைமுறை

சுகாதார அமைச்சில் பணிபுரியும் அனைத்து நிர்வாகப் பணியாளர்களுக்கும் கைரேகை இயந்திரங்களைப் பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்துப் பணியாளர் தர உத்தியோகத்தர்களும் ஒகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் தங்கள் தினசரி வருகை மற்றும் புறப்பாடு குறித்து குறிப்பிட வேண்டும். இது உள் குறிப்பேடு மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. செய்தி நிறுவனம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திர குப்தா, இந்தப் புதிய நடவடிக்கை, வருகைப் புத்தகத்திற்குப் பதிலாக அமையும் எனவும், இது சுகாதார அமைச்சில் பணிபுரியும் மருத்துவ நிர்வாகிகள் உட்பட அனைத்துப் பணியாளர் தர அதிகாரிகளுக்கும் பொருந்தும் எனவும் தெரிவித்தார்.

புதிய நடவடிக்கை, கூடுதல் கடமை மற்றும் கூடுதல் நேர கொடுப்பனவுகளுக்கு எந்த அலுவலர்கள் தகுதியுடையவர்கள் என்பதைத் துல்லியமாகத் தீர்மானிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதன்படி, அமைச்சரவைக் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டபடி, அங்கீகரிக்கப்பட்ட கூடுதல் கடமை கொடுப்பனவுகளை இது உறுதி செய்கிறது, என அவர் அடிக்கோடிட்டுக் கூறினார்.

## அக்கரைப்பற்றில் தொழிற் பயிற்சி அதிகார சபையின் விழிப்புணர்வு



(எம்.எப்.நவாஸ்)

அம்பாறை, ஜூலை 28

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் அம்பாறை மாவட்ட காரியாலயத்தினால் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற்றுத்தரும் பயிற்சி நெறிகள் சம்பந்தமாக, இளைஞர்கள் யுவதிகளை விழிப்பூட்டும் செயலமர்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் அவர்களின் வழிகாட்டலில் சமுர்த்தி தலைமையக கேட்போர் கூடத்தில் நேற்று தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லா தலைமையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயன்பெறும் குடும்பங்களில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு தேடும் இளைஞர் யுவதிகளுக்கு, சமுர்த்தி பிரிவினரால் அது தொடர்பான தொழிற் பயிற்சியை வழங்குதல் சம்பந்தமான வேலை திட்டத்திற்கமைவாக இந்த விழிப்பூட்டல் செயலமர்வு இடம்பெற்றதாக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் வை.நாசீத் (நழீமி), தொழிற்பயிற்சி அதிகார சபை அதிகாரிகள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

## அச்சுவேலியில் பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள் வந்தது

யாழ்ப்பாணம் - அச்சுவேலி வல்லை இந்து மயானகளப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

அச்சுவேலிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மரணச் சடங்கின் இறுதி ஊர்வலத்தின்போது இளைஞர்களினால் வீசப்பட்ட பட்டாசு வெடி புற்தரவையில் விழுந்து தீப்பற்றிக்கொண்டது. இதனால், குறித்த பகுதியின் பெரும்பாலான பற்றைக் காடுகள் தீயில் கருகி நாசமாகின.

இது தொடர்பாகப் பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய, பிரதேச சபைப் பணியாளர்கள் மூலம் தீப்பரவல் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது.

## குவைத்திலிருந்து 62 இலங்கையர் நாடு கடத்தப்பட்டதாகத் தகவல்

செல்லுபடியாகும் விசாக்கள் இன்றி சட்டவிரோதமாக பணிபுரிந்த 62 இலங்கை பிரஜைகள் குவைத்தில் இருந்து நாடு கடத்தப்பட்டதாக தகவல் வழங்கப்பட்டுள்ளது.

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தினால் தயாரிக்கப்பட்ட தற்காலிக கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இந்தக் குழுவினர் குவைத்தில் இருந்து நாடு கடத்தப்பட்டதாக தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். உள்நாட்டுச் சேவைகளுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட வீடுகளை விட்டு ஓடிப்போய், பல இடங்களில் பணிபுரியும்போது தற்காலிக விடுதிகளில் தங்கியிருந்ததாகவும், விசா இல்லாததால் இது சட்டவிரோதமானது என்றும் அவர் மேலும் கூறினார். அதன்படி, நாடு கடத்தப்பட்டவர்களில் 59 பேர் பெண் பணியாளர்கள், மூவர் ஆண் பணியாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (மி)

## மடு மாதா தேவாலய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடு திருத்தலத்தில் உள்ள வீடுகள் அனைத்தும் முன்பதிவு செய்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையினால் வருகின்ற திருப்பணிகளுக்கு வீடு வழங்க முடியாத நிலை உள்ளது. எனினும், ஆயிரக்கணக்கான மக்கள் கூடாரம் அமைத்து மடு திருவிழாவில் கலந்து கொள்ள நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எதிர்வரும் ஆவணி மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆயத்த நவ நாட்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதனைத்தொடர்ந்து ஆவணி 14 ஆம் திகதி மாலை வேஸ்பர் ஆராதனை இடம்பெறும் எனவும், 15 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (க)

## நீதிக்கான போராட்டத்தால் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியே, இன்று வடக்கு - கிழக்கில் பூரண கதவடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தை முன்னிட்டு, வடக்கு கிழக்கில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதோடு, சில மாவட்டங்களில் தனியார் பேருந்துகளும், சில இடங்களின் நெடுந்தூர பேருந்துகளும் போக்குவரத்தில் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஹர்த்தாலுக்கு, வர்த்தகர் சங்கங்கள், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்கள், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கங்கள் உள்ளிட்ட பல சங்கங்களும் சிவில் அமைப்புக்களும் ஆதரவினை வழங்கியிருந்தன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் மனிதப் புதைகுழி விவகாரத்திற்கு சர்வதேச மத்தியஸ்தத்துடன் விசாரணைகள் இடம்பெற வேண்டும் என வலியுறுத்தி, இன்றைய கதவடைப்பிற்கு முழுமையான ஆதரவினை வழங்கியுள்ளனர்.

கதவடைப்பு காரணமாக, வடக்கு கிழக்கில் பெரும்பாலான பகுதிகளில் ஆள் நடமாற்றமின்றி, வெறிச்சோடிக் காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

## வசந்த முதலிகேவுக்குப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அசௌகரியம் தொடர்பாக வசந்த முதலிகே உள்ளிட்ட இருவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையின் அடிப்படையில் நேற்று அவர்கள் கைது செய்யப்பட்டனர். (மி)

## சர்வதேச காண்காணிப்பில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க தற்போதைய பூகோள பொருளாதார அரசியல் சூழ்நிலையில் தென்னாசியாவின் உணர் புள்ளியில் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க முற்படும் சர்வதேசச் சக்திகள் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழின அழிப்பை மேற்கொண்ட, எமது உறவுகளை காணாமல் ஆக்கிய சிங்கள இராணுவம், தமிழர் தாயகம் எங்கும் நிலைகொண்டுள்ளது. இந்த இராணுவம் தமிழர் தாயகத்தில் 1983 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட அளவிற்கு குறைக்கப்பட்டு முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டும். அவர்கள் வலிந்து பறித்த தமிழர் நிலங்கள் மீளக் கையளிக்கப்பட வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான சர்வதேச விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன், அவர்களுக்கு சர்வதேச நீதி வழங்கப்பட வேண்டும். சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் எவ்வித நிபந்தனைகளுமின்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

காலங்காலமாக நடைபெற்று வரும் தமிழின அழிப்பிற்கு சர்வதேச நீதிப் பொறிமுறை (சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சர்வதேச நீதிமன்றம்) ஊடாக நீதி வழங்கப்படவேண்டும்.

அரச இயந்திரங்களான தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் , வனப் பாதுகாப்பு திணைக்களம், நிலவள திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பௌத்தமயமாக்கல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை சிறிலங்கா அரசாங்கமானது முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகிறது.

வட - கிழக்கில் உள்ள சுமார் 200 இற்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்த தமிழ் ஆலயங்களை கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகிறது. அத்துடன் தமிழர் தாயகம் எங்கிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டும், அமைக்கப்படுவதிற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றது. இவ்வாறான நில அபகரிப்புகளும், பௌத்த சிங்கள மயமாக்கல்களும் உடனடியாக நிறுத்தப்பட்டு காணிகள் மீள கையளிக்கப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதும், இன அடக்கு முறைக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வரும் வலிந்து காணாமல் ஆக்கப்படவர்களின் உறவுகள், மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

இது அவர்களின் பேச்சுரிமை, நடமாடும் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். அத்துடன் தமிழர் தரப்பில் உருவாகும் விடுதலைக்கான தன்னெழுச்சியான அரசியல் வெளியினை ஒடுக்குவதில் சிங்கள பௌத்த பேரினவாத அரசு குறியாகவே உள்ளது. இவ்வாறான அடக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

மேற்குறித்த உடனடி, அவசரமான பிரச்சனைகள் தீர்க்கப்படுமிடத்தேதான், அரசியல் தீர்வை நோக்கி நகரக் கூடிய புறச் சூழ்நிலை உருவாகும்.

தமிழ் தேசிய இனப்பிரச்சனைக்கான எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும், சர்வதேசத்தினால் நடத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணையைப் பெற வேண்டும். இதில் நம்மை நாமே ஆளக்கூடிய தீர்வுகளே தெரிவுகளாக உள்ளடக்கப்பட வேண்டும் என்பதையும் இவ்வறிக்கை மூலம் வெளிப்படுத்தி நிற்கின்றோம், என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஜனாதிபதியை நம்புகிறோம்! தெரிவித்தார் முஷாரப் எம்.பி





( வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் செப்டம்பர் மாதத்திலிருந்து நாடு வங்குரோத்து அடையும் என்று எதிராளிகள் சொல்கிறார்கள். ஆனால் செப்டம்பர் மாதத்தில் இருந்துதான் நாடு பாரிய அபிவிருத்தியை காணவிருக்கின்றது. ஜனாதிபதியை நாங்கள் பூரணமாக நம்புகின்றோம், என்று இன்று காரைதீவில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம்.முஷாரப் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், உதவிப் பிரதேச செயலாளர் பி.பார்த்தீபன், கணக்காளர் ஜனாபா தெஸ்மியா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பி.இராஜகுலேந்திரன் , திணைக்களங்களின் பிரதிநிதிகள், முப்படைகளின் பிரதிநிதிகள் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

எதிர்த்தரப்பினர் கடந்த நாலாம் மாசம் பட்டினிச்சாவு வரும் என்றார்கள். இப்பொழுது செப்டம்பரில் நாடு வங்குரோத்து அடையும் என்கிறார்கள். இவற்றையெல்லாம் எதிர்கொண்டு எமது ஜனாதிபதி அவர்கள் இந்த நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பி வருகின்றார். அவர் ஒரு செயல் வீரன் .

அடுத்த நான்கு வருட காலத்திற்கு நாட்டுக்கு ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையும் கிடைத்திருக்கின்றது. கூடவே 3.5 பில்லியன் டொலரும் கிடைக்க இருக்கின்றது .

எனவே நாட்டு மக்கள் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. செப்டம்பர் மாதத்தில் இருந்து அபிவிருத்தி சார் செயற்பாடுகளை நாங்கள் சாதாரணமாக மேற்கொள்ள முடியும். 2024 க்குரிய பட்ஜெட் மிகவும் சிறப்பாக அமைய இருக்கின்றது, என்றும் அவர் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச அபிவிருத்தி சார்ந்த பல விடயங்கள் கலந்துரையாடி, உடனுக்குடன் பல முடிவுகளும் எடுக்கப்பட்டன.

# இஸ்லாமிய அமைப்புகளின் தடை நீக்கம் முஸ்லிம் எம்.பிக்கள் நன்றி தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

இஸ்லாமிய அமைப்புகள் மீது போடப்பட்ட தடை அரசினால் உத்தியோகபூர்வமாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் நீக்கப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதாகவும், தடையை நீக்க நடவடிக்கை முன்னெடுத்த ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புத் துறைக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜங்க அமைச்சருமான சட்டதரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் அனுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஸாக் ரஹ்மான் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு தரப்பினருடனான எங்களின் நியாயமான கோரிக்கைகள் மற்றும் தொடர் முயற்சியின் பயனாக தடை செய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களின் தடை நீக்கப்பட்டுள்ளமை வரவேற்க கூடிய விடயமாக உள்ளது. அத்துடன், இறைவனுக்கே புகழனைத்தும். இத்தடை நீக்கம் செய்ய முன்வந்து நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்பு ஆலோசகர் முன்னாள் அமைச்சர் சாகல ரத்னாயக்க அடங்களாக பாதுகாப்பு படைகளின் பிரதானிகள், பாதுகாப்புப்படை அதிகாரிகளுக்கு நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

நாங்கள் சந்தித்து பேசியவுடன் இத்தடையை நீக்க ஜனாதிபதி முன்வந்ததுடன் பாதுகாப்பு தரப்பின் மேலதிக ஆராய்வுகள், நடவடிக்கைகள் காரணமாக சிறிய கால தாமதம் ஏற்பட்டிருந்தாலும் கூட இத்தடையை நீக்கியமை மகிழ்ச்சியளிக்கிறது.

வர்த்தமானியின் உப அட்டவணையில் குறிப்பிடப்படப்பட்டிருந்த ஐக்கிய தவ்ஹீத் ஜமாஅத், சிலோன் தவ்ஹீத் ஜமாஅத், ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத், அகில இலங்கை தவ்ஹீத் ஜமாஅத், ஜமாஅத் அன்ஸாரி சுன்னதில் முஹம்மதியா ஆகிய அமைப்புக்களின் தடை நீக்கப்பட்டுள்ள விடயமானது வெளிநாட்டு புலமைப்பரிசிலை பெறும் இளைஞர்கள், மாணவர்களின் எதிர்காலத்திற்கும், மார்க்க விடயங்களுக்கும், நாட்டின் பொருளாதார சமூக விடயங்களுக்கும் நன்மையாக அமையும் என்று நம்புகிறோம்.

மேலும், தடை நீக்கம் செய்யப்பட்டுள்ள அமைப்புக்கள் நாட்டினதும், முஸ்லிம் சமூகத்தினதும் மேம்பாட்டு விடயங்களில் கவனம் செலுத்த எங்களின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம், என்று அந்த அறிக்கையில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்














4th Project
இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

## ரஷ்யாவுக்கு சீனா இராணுவ உதவி அமெரிக்க உளவுத்துறை அறிக்கை

உக்ரைனுக்கு எதிராக போரில் ஈடுபட்டுள்ள ரஷ்யாவுக்கு இராணுவச் சாதனங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை சீனா அளித்து வருவதாக அமெரிக்க உளவுத்துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குலக நாடுகள் ரஷ்யாவுடன் அனைத்து வர்த்தக உறவுகளையும் துண்டித்த பிறகு, சீனா அதற்கு முக்கியமான வர்த்தகக் கூட்டாளியாக உள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுங்கத்துறைத் தகவல்களின் அடிப்படையில் ரஷ்யாவுக்கு கடல் பயணத்துக்குரிய சாதனங்கள், தொடர்பாடலை முடக்கும் செய்யும் தொழில்நுட்ப சாதனங்கள், போர் ஜெட் விமானங்களுக்கான உதிரி பாகங்கள் போன்றவற்றை சீனாவின் அரச பாதுகாப்பு நிறுவனங்கள் அனுப்பி வருவதாக அந்த உளவுத்துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக சீனாவுக்கு கச்சா எண்ணெயில் விலைத் தள்ளுபடிகளை ரஷ்யா அளித்து வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மி)



## பிலிப்பைன்ஸில் படகு கவிழ்ந்தது விபத்தில் 26 பேர் பலியாகினர்

நேற்றிரவு பிலிப்பைன்ஸ் நாட்டில் கடலில் படகு கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதில் 26 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா அருகே அந்தப் படகு சென்று கொண்டிருந்தபோது, பலத்த காற்று வீசியதால் அச்சமடைந்த பயணிகள், படகின் ஒரு பக்கத்திற்குச் சென்றபோது சமனிலையிழந்த படகு விபத்துக்குள்ளாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

படகில் பயணித்தவர்களின் எண்ணிக்கை குறித்து தகவல் தெரியவில்லை எனக்கூறியுள்ள அதிகாரிகள், 40 பேரை மீட்கப்பட்டுள்ளதாகத் தெரி வித்துள்ளனர்.

மீட்புப் பணிகள் தொடர்ந்த வண்ணம் உள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (மி)

## ரஷ்ய மலைப்பகுதியில் சிதறிய ஹெலிகொப்டர்



ரஷ்யாவின் பெலுகா மலைப்பகுதியில் சுற்றுலா ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகி, வெடித்துச் சிதறியதில் 10 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. குறித்த ஹெலிகொப்டர், 13 பயணிகளுடன் பெலுகா மலையில் சுற்றுலாச் சென்றிருந்தபோதே, திடீரென தீப்பிடித்து தரையில் பதிந்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில், யுங்குர் என்ற கிராமத்தில் தரையிறங்கும் முயற்சியில் ஸ்ரீ ஹெலிகொப்டர் மின் கம்பியில் உரசியதாகவும், இதன் காரணமாகவே வெடித்துச் சிதறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மருத்துவ உதவிக்குழுவினர் மற்றும் தீயணைப்பு வீரர்கள், தீயை அணைக்கப் போராடினர்.

ஆரம்பத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஆறு பேர் என்று கருதப்பட்டது. ஆனால், அதன் பின்னர் மேலும் நான்கு இறப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றே அஞ்சப்படுகிறது.

சடலங்களை அடையாளம் காணும் பணி இன்னும் ஆரம்பிக்காத நிலையில், அந்த ஹெலிகொப்டரில் பயணித்தவர்களில் 8 பேர் பெண்கள் என தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே, சிலர் காயங்களுடன் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டதாகவும் அவர்களின் நிலை தொடர்பில் உறுதியான தகவல் ஏதும் வெளியாகவில்லை எனவும் கூறப்படுகிறது. (கோ)

## உலகிலேயே அதிக வெப்பமான மாதமாக சாதனை முன்னைய பதிவுகளை முறியடிக்கிறது ஜூலை!

வெப்ப அலைகளுக்கு மத்தியில், ஜூலை உலகின் மிக வெப்பமான மாதமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மாதம் மிகவும் சூடாக உள்ளதாகவும், இன்னும் சில நாட்களில் 2019 இன் சாதனையை இது முறியடிக்கும் எனவும் ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் அன்டோனியோ குட்டரெஸ் கூறுகையில், இந்த பூமி உலகளாவிய வெப்பநிலையின் சகாப்தத்தில் நுழைகிறது என்றார்.

அதிகரித்த வெப்பமானது, முக்கியமாக புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டுடன் தொடர்புடையது என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பருவநிலை மாற்றத்தை இருத்தலியல் அச்சுறுத்தல் என்றும், இனி காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை யாரும் தவிர்க்க முடியாது என்றும் விவரித்தார்.

கடந்த ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஆண்டுகளில் ஜூலை மிகவும் வெப்பமான மாதமாக இருக்கலாம் என்று சில ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

சமீபத்திய வாரங்களில் உலகம் அதிக அளவு வெப்பத்தை காண்கிறது என்பதற்கான அறிகுறிகள் ஏராளமாக இருப்பதால், ஜூலை வெப்பமான மாதத்திற்கான தற்போதைய சாதனையை முறியடிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கோப்பர்நிகஸ் காலநிலை மாற்ற சேவையின்படி, உலகின் வெப்பமான நாள் ஜூலை 6 அன்று நிகழ்ந்தது எனவும், மேலும் இதுவரை பதிவுசெய்யப்பட்ட நாட்களில் வெப்பமான 23 நாட்கள் இந்த மாதத்தில் இருந்தன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாதத்தின் முதல் 25 நாட்களில் சராசரி வெப்பநிலை 16.95 செல்சியஸ் ஆகும். இது கடந்த ஜூலை 2019 முழுவதுமான காலப்பகுதியில் நிலவிய 16.63 செல்சியஸ் சராசரி வெப்பநிலையை விட அதிகமாக உள்ளது.

உலகின் அதிகரித்த வெப்பமயமாதலுக்கு மனித நடவடிக்கைகளும் புதைபடிவ எரிபொருட்களின் உமிழ்வுகளுமே பெரும்பாலும் காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். (மி)

## அமெரிக்காவுக்கு உயர் கல்விக்குச் சென்ற இந்தியப் பெண்ணுக்கு நேர்ந்த பரிதாபம்




அமெரிக்காவுக்கு உயர் கல்வி கற்கச் சென்ற இந்திய இளம்பெண்ணொருவர், சாலையோரம் பட்டினியால் வாடிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட விடயம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க நகரமான சிக்காகோவில், சாலையோரமாக பட்டினியால் வாடிய நிலையில் இந்திய இளம்பெண் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

சையதா லுலு மின்ஹாஜ் ஜைதி என்ற அந்தப் பெண், இந்தியாவின் ஹைதராபாதைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. உயர் கல்வி கற்பதற்காக மிச்சிகன் மாகாணத்திலுள்ள டெட்ராயிட் நகருக்குச் சென்ற அவர், தற்போது, இல்லினாயிஸ் மாகாணத்திலுள்ள சிக்காகோ நகரில், சாலையோரமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

பசியால் வாடிய நிலையில், மன அழுத்தத்துக்குள்ளாகியிருந்த சையதாவுக்கு ஒருவர் உணவும் தண்ணீரும் கொடுக்கும் காட்சிகள் சமூக ஊடகம் ஒன்றில் பகிரப்பட்டுள்ளன.

தன் பெயர் கூட சரியாக நினைவில் வராத அளவுக்கு பரிதாபமான நிலையில் அவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், சையதாவின் தாயான சையதா வஹாஜ் பாத்திமா, தன் மகளை இந்தியாவுக்குக் கொண்டுவர உதவுமாறு இந்தியத் தூதரகத்தைக் கோரியுள்ளார்.

தன் மகளுடைய உடைமைகள் திருட்டுப் போய்விட்டதாகவும், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில், பட்டினியால் வாடிய தன் மகளை ஹைதராபாதைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் கண்டுபிடித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (கோ)

## சூடுபிடிக்கும் அமெரிக்க தேர்தல் தேர்தல் களப் பணிகள் ஆரம்பம்!



நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் அமெரிக்கப் பொதுத் தேர்தல், எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள நிலையில், தேர்தலுக்கான ஆரம்ப கட்டப் பணிகள் தொடங்கிவிட்டன.

ஆளும் கட்சியான ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ஜோபைடன், ராபர்ட் கென்னடி, மரியன்னா வில்லியம்சன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

அதில் ஜோபைடனுக்கு 80 வயது ஆகி விட்டதால் அவருக்குப் பதிலாக, தற்போதைய துணை ஜனாதிபதியான கமலா ஹாரிஸ் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட வேண்டும் என அமெரிக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

குடியரசுக் கட்சி சார்பில், டொனால்ட் ட்ரம்ப், பர்கம், கிறிஸ்டி, விவேக் ராமசாமி, டிசாண்டிஸ், நிக்கி ஹாலே உள்ளிட்ட 13 பேர் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட உள்ளனர்.

அதில் டொனால்ட் டிரம்ப், விவேக் ராமசாமி இருவருக்கும் இடையேதான் கடுமையான போட்டி நிலவும் என அரசியல் வல்லுனர்கள் கணித்துள்ளனர். டொனால்ட் டிரம்ப் மீது குற்றவியல் வழக்குகள் இருப்பதால், விவேக் ராமசாமிதான் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி ஜனாதிபதித் தேர்தலில், ஜனநாயகக் கட்சி சார்பில் கமலா ஹாரிசும், குடியரசுக் கட்சி சார்பில் விவேக் ராமசாமியும்தான் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

அப்படி ஒரு சூழ்நிலை வரும்பட்சத்தில், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு தமிழர் வம்சாவழியினர் இவர்கள் எனவும், அதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விவேக் ராமசாமி நன்றாகத் தமிழ் பேசுவார் எனவும், அவருக்கு 37 வயதாகும் நிலையில், இவர் ஜனாதிபதியானால், மிகக்குறைந்த வயதுடைய அமெரிக்க ஜனாதிபதி என்ற பெருமை இவரைச் சாரும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

தொழில் முனைவோராக இருக்கும் அவர், தற்போது அமெரிக்க மக்களின் கவனத்தை அதிகம் ஈர்த்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (மி)

# யாழில் இலவச கண்புரை சத்திரசிகிச்சை! தேவையுடையோரைத் தெரிவு செய்தல்

## நாளை தெல்லிப்பளை, பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ் மாவட்டத்தில் கண்புரை (கட்ராக்ட்) சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான சத்திரசிகிச்சையினை முற்றிலும் இலவசமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்கண்புரை சத்திரசிகிச்சைத் திட்டமானது ஐக்கிய இராச்சியத்தின் அசிஸ்ட் ஆர்ஆர் என்ற நிறுவனத்தினால் ஒருங்கிணைக்கப்படுவதுடன், சத்திர சிகிச்சைகளுக்கான கண்வில்லைகளும், சத்திரசிகிச்சை நுகர்வு மற்றும் மருந்துப் பொருட்களும் மலேசியாவைச் சேர்ந்த அலாக்கா மற்றும் ஆனந்தா நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

அதேபோன்று பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற் கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாமும் நாளைய தினம் காலை 9 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தி யசாலைகளில் இருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும், சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச்செல்வதற்ககுமான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# குளவிக்கொட்டுக்கு இலக்காகிய 17 மாணவர்கள் வைத்தியசாலையில்



மதவாச்சி, கடவத்கம பிரதேசத்தில் குளவி கொட்டுக்கு இலக்கான 17 மாணவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடவத்கம பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் மேலதிக வகுப்புகளில் கலந்துகொண்ட மாணவர்களே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு ஆளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலையில் இருந்த குளவிக் கூட்டை குரங்குகள் கலைத்ததன் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குளவிகளின் தாக்குதலில் காயமடைந்த 11 தொடக்கம் 16 வயதுக்குட்பட்ட மாணவர்க ளில் 10 ஆண் பிள்ளைகளும் 7 பெண் பிள்ளைகளும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாணவர்கள் தற்போது மதவாச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதுடன், மேலதிக சிகிச்சைகளுக்காக ஒருவர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (மி)

# மாணவர்களால் தாக்கப்பட்ட ஆசிரியர் அட்டாளைச்சேனையில் ஆர்ப்பாட்டம்

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி ஒன்றின் ஆசிரியர் மீது அதே பாடசாலை மாணவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் காயமடைந்த ஆசிரியர் சிகிச்சைகளுக்காக அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை நிறைவடைந்து ஆசிரியர் வீடு சென்ற சந்தர்ப்பத்தில் அந்தப் பாடசாலையில் உயர் தரத்தில் கற்கும் இரண்டு மாணவர்களும், அவர்களது உறவினர்களும் இணைந்து ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது, ஆசிரியரின் உந்துருளி மற்றும் அவரது உடமைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

பாடசாலையின் ஒழுக்கக் கோவையைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட முரண்பாட்டினால்தான் குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஆசிரியர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பாடசாலை ஆசிரியர்களால் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு வலியுறுத்தி அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.07.2023இல் வெளியிடப்பெற்றது.